**IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,**

**CHENNAI - 600 104.**

O.S. No. 3069/2014

Depositi of witness for PW1

Name : Ravikumar

தேதி. 29.03..2021

PW1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தற்போது குடியில்லை. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தற்போது குடியில்லை. நான் இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு 2014ல் வேறு விலாசத்திற்கு மாறிவிட்டேன். Ex.A2, A5, A6 and A7 கடனுறுதி சீட்டுகள் காலவாதி ஆகிவிட்டதால்தான் அப்பொழுதே நாங்கள் நிரப்பபடாத கடனுறுதி சீட்டுகள் கொடுத்ததை வைத்து அவைகளை Ex.A11 to A14 கடனுறுதி சீட்டுகளாக தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. Ex.A 15லிருந்து A 18 வரையான கடனுறுதி சீட்டுகளை தயார் செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்ததைதான் நான் தாக்கல் செய்திருக்கிறறேன். பிரதிவாதி என்னிடம் வாங்கிய பழைய கடன்களை திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் பணத்தை திருப்பி கொடுக்கவே இல்லை. அதனால் நிரப்பபடாத காசோலை மற்றும் கடனுறுதி சீட்டுகள் திருப்பி கொடுக்கும்படி அசல் வழக்கு 2548/2014 -12 வது உதவி உரிமையியல் நீதிமன்றத்தில் 22.4.2014 அன்று தாக்கல் செய்துவிட்டார் என்றால் அதற்கு முன்பே நான் எக்மோர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன். 29.4.2014ல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு ஆவணங்களை அனைத்தையும் நான் தயார் செய்து தாக்கல் செய்திருக்கிறேன்

என்றாலும் பிரதிவாதி எனக்கு எந்த தொகையும் செலுத்தவேண்டியது இல்லை என்றாலும் சரியல்ல. எனவே, இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>அனுமதியுடன் மறுவிசாரணை</u>

Ex.B2 ஆவணம் பிரதிவாதி வழக்கறிஞர் சாட்சியத்தின்பொழுது என்னிடம் காண்பித்தது அல்ல. Ex.B2வில் உள்ளது என் மனைவியின் கையெழுத்து அல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Dt:29.03.2021 III Addl. Sessions Judge.